**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**<u>அசல் வழக்கு எண். 40/2019</u>**

பெயர் : ரெங்கபாஷியம் P.W.1.

த/பெ. : ராமசாமி

தேதி : 24.04.2025

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**<u>குறுக்கு விசாரணை:</u> –**

நான் என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் பெயரில் உள்ள தாவா சொத்தை பிரதிவாதி செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்தது தவறு என கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் எத்தனை அயிட்ட சொத்துக்களுக்கு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் இரண்டு அயிட்ட சொத்துக்களுக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்துகளின் சர்வே எண். 489/1, 489/2, 489/3, 489/4, 489/5, 489/6 முதல் 489/26 வரை ஆகும். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் தாவா B அயிட்ட சொத்துக்களான புல எண் 489/6 முதல் 489/26 வரையிலா சொத்துக்களுக்கு மட்டுமே பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி எனது சகோதரர் என்றால் சரிதான். தாவா சொத்துகளை பொருத்து 04.09.1977ல் எனது தந்தை ஒரு உயில் ஆவணம் எழுதிவைத்துள்ளார் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் 1ம் பிரதிவாதிக்கு சி அட்டவணை சொத்து ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சி அட்டவணை சொத்தை தான் நான் வழக்குரையில் பி அட்டவணை சொத்தில் 1 முதல் 5 அயிட்டங்களாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த பி அட்டவணை சொத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 5 அயிட்ட சொத்துகள் உயில் படி 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட சொத்துகள் என்றால் சரிதான். மேற்படி 1 முதல் 5 அயிட்ட சொத்துகளை 1ம் பிரதிவாதி அவரது மனைவிக்கு 05.02.2014 அன்று செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த செட்டில்மெண்ட் ன் அடிப்படையில் 2ம் பிரதிவாதி அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. மேற்படி செட்டில்மெண்ட் பத்திரத்தின் அடிப்படையில் கிடைக்கப்பெற்ற சொத்தை 2ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு பெந்தக கடன் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். தாவா பி அட்டவணை சொத்தில் 1 முதல் 5 அயிட்ட சொத்துகள் 1,2 பிரதிவாதிகளின் அனுபவத்தில் உள்ளதால் தான் அந்த சொத்துகள் குறித்து நான் எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. தாவா ஏ அட்டவணை சொத்தை பொருத்து நான்

எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் சரியல்ல. தாவா ஏ அட்டவணை சொத்தை பொருத்து நான் எந்த பரிகாரமும் கோராததால் அந்த சொத்துகள் இந்த வழக்கிற்கு சம்பந்தப்பட்ட சொத்துகள் இல்லை என்றால் சரியல்ல. தாவா ஏ அட்டவணை சொத்து 1ம் பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ளது என்றால் சரிதான். தாவா பி அட்டவணை சொத்தை பொருத்து எந்த தேதியில் வாய்மொழி பரிவர்த்தனை ஏற்பட்டது என்று நான் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். உண்மையிலேயே நான் சொல்வது போல் வாய்மொழி பரிவர்த்தனை நடந்திருந்தால்அதன் விபரங்களை நான் எனது வழக்குரையில் குறிப்பிட்டு கூறியிருப்பேன் என்றால் சரியல்ல. வாய்மொழி பரிவர்த்தனை எதுவும் நான் சொல்வது போல் ஏற்படவில்லை என்றாலும் வாய்மொழி பரிவர்த்தனை சட்டப்படி ஏற்புடையது அல்ல என்றாலும் சரியல்ல. வாய் மொழி பரிவர்த்தனை ஏற்படாததால் அதன் அடிப்படையில் நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

பிரதிவாதி தரப்பு வழக்கிறஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.